**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 199/2022 P.W. 1/ LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | செந்தில் | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | பழனிச்சாமி | **Calling** | **:** | |
| **Village** | **:** | தளிக்கோட்டை | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | 49 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.12.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் கிராம உதவியாளராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 26.06.2019 இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் பஞ்சாயத்தில் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்தது. நானும், மண்டல துணை வட்டாச்சியர் , தலைமையிட துணை வட்டாச்சியர், மகாதேவ பட்டிணம் கிராம உதவியாளர் சேவற் கொடியான் மணல் அள்ளுவதாக சொன்ன அந்த இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்தில் ஒரே கூட்டமாக இருந்தது. நான் ஜீப்பில் இருந்து இறங்கி நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது இருச்சக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் மூவரில் என்னை வினோத் என்பவர் கட்டையால் அடித்து, காலால் எட்டி உதைத்தார், கட்டையால் அடித்தில் எனது கழுத்து பகுதியில் வலி ஏற்பட்டது. நாகராஜ் என்பவர் தகாத வார்த்தைகள் சொல்லி திட்டினார. நாளைக்கு ஊருக்குள் வந்தால் உன்னை காலி செய்து விடுவேன் என்றும் திட்டினார். பிறகு வட்டாச்சியர் இருவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு என்னை சேர்த்தனர். ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2) நீதிமனற்த்தில் காட்டப்படும் ஆவணமான புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அசா-ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் 12 ஆண்டுகொலமாக அந்த கிராமத்தில் மினியலாக பணியாற்றி வருகிறனே் என்றால் - சரிதான். நான் அந்த கிராமத்திலே தொடர்ந்து பணியாற்றுவதால் அந்த கிராம மக்களை நன்கு தெரியும் என்றால் - சரிதான்.

2) நானும், தாசில்தாரலெல்லாம் வடுவூர் காவல் நிலையம் சென்று விட்டு பின் மன்னார்குடி மருத்துவமனைக்கு சென்றோம் என்றல் - சரிதான். நான் மயக்கமாக இருந்ததால் தாசில்தார் தான் புகார் கொடுத்தார் என்றால் - சரிதான்.

3) அதற்கு பிறகு என்னை மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தார்கள் அங்கு நான் மயக்க நிலையில்தான் இருந்தேன். அதன் பிறகு 3 நாட்கள் கழித்து வடுவூர் காவல் நிலைய ஆய்வாளர் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார். விசாரித்ததை எழுதிக்கொண்டு என்னிடம் கையொபப்ம் வாங்கி கொண்டார்கள் என்றால் - சரிதான்.

4) அந்த சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் மட்டும் தான் செ்னறேன் வேறு யாரும் என்கூட வரவில்லை என்றால் - சரிதான். சம்பவ இடத்தில் திருஞான போர் செட் அருகில் 15, 20 நபர்க்ள இருந்தார்கள்க என்றால் - சரிதான். நான் இருட்டாக இருந்தால் யார் என்று பார்ப்பதற்கு நான் அவரிடம் செ்னறு பார்த்தபோது பைக்கோட கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ இருட்டில் என்னை கீழே தள்ளிவிட்டார்கள் என்றால் - சரிதான். அந்த நேரத்தில் யாரோ தள்ளிவிட்டார்கள். யார் என்று தெரியாது.

5) இது போல் தொடர்ந்து மணல் திருட்டு நடைப்பெறுவதால் ரோந்து பணியில் ஈடுபடுவது வழக்கம் என்பதால் அன்று ரோந்து பணியில் ஈடுபட்டோம் என்றால் - சரிதான். இந்த நபர்களை ஏற்கனவே தெரியும் என்றால் -- சரிதான். சம்பவ இடத்திற்கு நின்று கொண்டு போலீஸ் போன் செய்து சம்பவ இடத்திற்கு வரசொல்லவில்லை என்றால் - சரிதான்.

6) தாசில்தார் கிராம முக்கியஸ்தர்களை வரசொல்லி தாசில்தார் விசாரித்த விபரம் எனக்கு தெரியாது. நான் தான் மருத்துவரிடம் தாக்கிய ஆயுததை சொன்னேன். எனக்கு ஏற்பட்ட காயத்தையும் சொன்னேன் என்றலால் - சரிதான். இதுபோல் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் எதிரி என்னை தாக்கி காயப்படுத்தியதாக சொல்லவில்லை என்றால் - சரியல்ல.

7) வரைபடத்தில் சம்பவ இடமாக சொல்லபடுகிற இடத்தில் ஆறு ஒன்றும் இல்லை என்றால்- - சரிதான். நான் 3 நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகளிடம் இருந்து ஏதாவது மண்வெட்டி , மண் அள்ளியதற்கான கூடையோ, எதையாவது பார்த்திற்களா என்றால் - இல்லை- தகவல் தெரிந்து சம்பவ இடத்தில் உள்ள அதனை எடுத்து சென்று விட்டார்கள்.

8) என்னுடைய புகாரிலோ, வாக்குமூலத்திலோ எதிரிகள் மண் அள்ளுவதற்கு பயன்படுத்திய கூடை, தளவாட சாமான்களை எடுத்து சென்று விட்டாரகள் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் - சொல்லியிருக்கிறேன்.

**9) நான் சொல்வது போல் சொன்ன நாளில் , சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெற விலலை என்றால் - சரியல்ல. நான் தாசில்தார் வட்டாச்சயர் அலுவலத்திலே இருந்து கொண்டே யாரோ சொன்ன தவறான தகவலின் அடிப்படையில் ஒரு பொய்யான வழக்கு போடுவதற்கு உதவியாக இருந்துள்ளேன்என்றால் - சரியல்ல.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/------------

M. Sureshkarthik,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**மன்னார்குடி.**